**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி.105/2022</u>**

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயராமன் | வயது | 70 |
| த.பெ.(அ)க.பெ. | கோவிந்தசாமி | தொழில் | கூலி |
| ஊர் | தண்டுகானூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் தண்டுகானூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். அவரகள் எனது பங்காளிகள். 1ம் எதிரி எனது பெரியப்பா மகன். 2ம் எதிரி 1ம் எதிரியின் மகன். இந்த வருடம் 3வது மாதம் ஒருநாள் மாலை 6.00 மணியளவில் நான் கொரட்டியிலிருந்து வீட்டிற்கு செல்ல ஊமையன் வட்டம், வழியாக இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது இந்த வழியாக எதற்கு வருகிறாய் என்று சொல்லி எதிரிகள் இருவரும் என்னை வழிமடக்கி, அதில் எதிரி ஸ்ரீராமுலு என்னை கீழே தள்ளி தடியால் இடது கையின் மீது அடித்தான். அதில் எனக்கு எலும்பு உடைந்துவிட்டது. அப்போது 1ம் எதிரியுடன் வந்த விஜயகாந்த் என்னை மார்பின்மீது கையால் குத்தி எட்டி எட்டி உதைத்தார். அதன்பிறகு ஆம்புலன்ஸிற்கு போன் செய்து வரவழைத்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். 12 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சமயம் போலீஸார் அங்கு வந்து விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் போட்டேன். புகார் வாக்குமுலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.1ம் எதிரி என்னை தாக்க பயன்படுத்திய தடியை பார்ததால் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் தடியால் அவர் தாக்கவில்லை. அந்த தடி இதைவிட கனமாக இருந்தது. 1ம் எதிரி என்னை தாக்க பயன்படுத்திய தடியை என் வீட்டின் அருகே போட்டு விட்டு சென்றார். அதனை எனது மகள் எடுத்து வைத்துள்ளார். இப்போதும் அது அங்கு தான் உள்ளது. அதனை போலீஸார்

போலீஸார் என் வீட்டிற்கு வந்து விசாரித்த சமயம் எனது மகள் அவர்களிடம் காட்டியுள்ளார். போலீஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.

**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.**

**சி.சி.105/2022**

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தருமன் | வயது | 30 |
| த.பெ.(அ)க.பெ. | ராமசந்திரன் | தொழில் | விவசாயம் |
| ஊர் | ஊமோடான் வட்டம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை :

நான் ஊமோடான் வட்டம், தண்டுகானூரில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். அ.சா.1 எனது பெரியப்பா முறை. வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பங்காளிகள். அவர்கள் இருவருக்குமிடையே நிலத்தில் வழி சம்மந்தமாக பிரச்சனை உள்ளது. கடந்த 07.03.2022 அன்று ஸ்ரீராமுலு வீட்டின் வழியாக டிராக்டரில் மண் எடுத்துக்கொண்டு வந்துள்ளார். அ.சா.1 ஜெயராமன் இந்த வழியாக வரக்கூடாது என்று தடுத்துள்ளார். இந்த சம்பவத்திற்கு முன்பாகவே ஜெயராமன் இந்த வழியாக வரும்போது ஸ்ரீராமுலு தடுத்துள்ளார். அன்றைய தினம் மாலை 6,00 மணியளவில் அவர்களுக்குள் சண்டையிட்டுள்ளார்கள். அதில் ஜெயராமனுக்கு அடிப்பட்டதாக சொன்னார்கள். ஆம்புலன்ஸ் முலம் மருத்துவமனை சென்றதாக சொன்னார்கள். ஆனால் நான் அந்த சமயம் ஊரில் இல்லை. போலீஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.